## எங்களை எவ்வாறு தொடர்புகொள்ளலாம்

- நீங்கள் எங்களை எந்த நேரத்திலும் **1800 999 057** என்ற எண்ணில் அழைக்கலாம் – தரைவழித் தொலைபேசியிலிருந்து அழைப்பு இலவசமாகும்
- நீங்கள் MHAS -ஐ அழைக்குமாறு மனநலச் சேவைகள் ஊழியரைக் கேட்கலாம். அவர்கள் இதை 24 மணிநேரத்திற்குள் கட்டாயம் செய்யவேண்டும்.
- MHAS அலுவலகம் திங்கள் முதல் வெள்ளி வரை, காலை 8.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை திறந்திருக்கும், ஆனால் நீங்கள் பதிலளிப்பு இயந்திரத்தில் உங்கள் செய்தியைப் பதிவுசெய்யலாம். வாரஇறுதி நாட்களாக இருந்தாலும் கூட, நாங்கள் இயன்றவரை விரைவாக உங்களைத் தொலைபேசியில் திரும்ப அழைப்போம். உங்கள் பெயர், தொடர்பு எண், பிறந்த தேதி மற்றும் நீங்கள் வசிக்குமிடம் ஆகியவற்றை நாங்கள் அறிய வேண்டும்.
- எங்கள் இணையத்தளத்தைப் பார்வையிடுங்கள்: **www.mhas.wa.gov.au**

## நாங்கள் யார் – மனநலம் தொடர்பாக பரிந்துபேசும் சேவை [The Mental Health Advocacy Service (MHAS)]

- MHAS என்பது மருத்துவமனைகள் மற்றும் எல்லா மனநலச் சேவைகளின் சார்பில்லாத ஒரு இலவச சேவையாகும்.
- உங்களுடைய விருப்பங்களுக்கு ஏற்ப நாங்கள் எடுத்துரைப்போம் என்பதால் நீங்கள் சொல்வதை நாங்கள் செவிமடுப்போம்.
- நாங்கள் உங்களுக்காகப் பரிந்துபேச உதவுவதற்கு, *மனநலச் சட்டம் 2014*-இன் கீழ் எங்களுக்கு அதிகாரம் உள்ளது. நீங்கள் ஆட்சேபிக்காது விட்டால் நாங்கள் உங்களுடைய மருத்துவக் கோப்பைப் பார்த்து, உங்களுடைய சிகிச்சை மற்றும் பராமரிப்புப் பற்றிய உங்கள் கேள்விகளுக்குப் பதில்களைப் பெற முயற்சி செய்யலாம்.
- மனநலச் சேவைகள் ஊழியர்கள் எங்கள் கேள்விகளுக்குப் பதிலளிக்க, எங்களுக்குத் தகவல்களை வழங்க மற்றும் உங்களுக்காகப் பிரச்சனைகளைத் தீர்க்க முயற்சி செய்வதற்கு எங்களுக்கு உதவ வேண்டியது கட்டாயமாகும்.

## பயனுள்ள தொடர்பு விவரங்கள்

### மனநலம் தொடர்பாகப் பரிந்துபேசும் சேவை

பதில் கடிதம் அனுப்புவதற்கான கட்டணம் செலுத்தப்பட்டது 84455 – தபால் கட்டணம் தேவையில்லை
தொலைபேசி: (08) 6234 6300 அல்லது இலவச தொலைபேசி அழைப்பு: 1800 999 057
இணையத்தளம்: www.mhas.wa.gov.au

### பிற பயனுள்ள தொடர்பு விவரங்கள்

**பிற பயனுள்ள தொடர்பு விவரங்கள் (Health Consumers' Council)**
உடல்நலச் சேவைகள் தொடர்பான வழக்குரைச் சேவை, தகவல்கள் மற்றும் ஆலோசனைக்கு
தொலைபேசி: (08) 9221 3422 அல்லது இலவச தொலைபேசி அழைப்பு: 1800 620 780

**மனநலச் சட்ட நிலையம் (Mental Health Law Centre)**
சட்ட ஆலோசனை மற்றும் மனநல நடுவர் மன்ற விசாரணைகளில் பிரதிநிதித்துவம் தொலைபேசி: (08) 9328 8266 அல்லது இலவச தொலைபேசி அழைப்பு: 1800 620 285 அல்லது ஆலோசனைக்கான அழைப்பு எண்: (08) 9328 8012

**உடல்நலம் மற்றும் உடற்குறைச் சேவைகள் குறித்துப் புகாரளிப்பதற்கான அலுவலகம் [Health and Disability Services Complaints Office (HaDSCO)]**
அரசாங்க மற்றும் தனியார் உடல்நலச் சேவைகள் குறித்த புகார்களைப் புலனாய்வு செய்வதற்கு
தொலைபேசி: (08) 6551 7600 அல்லது இலவச தொலைபேசி அழைப்பு: 1800 813 583

MHAS
MENTAL HEALTH ADVOCACY SERVICE

MHAS MENTAL HEALTH ADVOCACY SERVICE

TAMIL

# உங்கள் கருத்துக்களைத் தடையின்றி தெரிவியுங்கள் - உங்கள் உரிமைகளை அறிந்துகொள்ளுங்கள்

**இலவச தொலைபேசி அழைப்பு எண் 1800 999 057**

## உங்களுக்கு உதவிட எங்களால் **என்ன** செய்ய முடியும்

### உங்களுடைய உரிமைகளைப் பாதுகாக்க, உங்களுடைய சொந்த விருப்பங்களை நீங்கள் வெளிப்படுத்த உதவ மற்றும் உங்களுக்கு என்ன நிகழ வேண்டுமென்று சொல்வதற்கு மனநலம் தொடர்பாக ஆதரவளிப்போர் இங்குள்ளனர்.

நாங்கள் உங்கள் சார்பாகச் செயல்படுகிறோம் மற்றும் எங்களால் கீழ்க்கண்டவற்றுக்கு உங்களுக்கு உதவ முடியும்:

- உங்கள் உரிமைகளை நீங்கள் புரிந்துகொண்டு அவற்றை வலியுறுத்த
- உங்கள் மருத்துவர் அல்லது சிகிச்சையளிக்கும் குழுவை நீங்கள் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்வது மற்றும் உங்களுடன் சமூகமளிப்பது
- உங்கள் மருத்துவர் அல்லது சிகிச்சையளிக்கும் குழுவை நீங்கள் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்வது மற்றும் உங்களுடன் சமூகமளிப்பது
- மற்றொரு மனநல மருத்துவரிடமிருந்து மேற்கொண்டு கருத்துக்களைப் பெறுவது
- உங்களின் சொந்த விருப்பதுக்கு மாறான ஆணையை அல்லது உங்களைப் பற்றி மேற்கொள்ளப்பட்ட பிற முடிவுகளை மீளாய்வு செய்வதற்கு மனநல நடுவர் மன்றத்திடம் விண்ணப்பம் செய்வது
- நடுவர் மன்ற வழக்கு விசாரணையில் உங்களை ஆதரிப்பது
- உங்களை வழக்கறிஞர்களிடம் பரிந்துரைப்பது
- உங்கள் சிகிச்சை, ஆதரவு மற்றும் விடுவிப்புத் திட்டத்தில் உள்ளீட்டைப் பெறுவது
- மனநலச் சேவை குறித்துப் புகாரளிப்பது
- உங்களுக்காக ஒரு உரைப்பெயர்ப்பாளரை ஏற்பாடு செய்வது
- உங்கள் குடும்பம் அல்லது ஏனைய ஆதரவாளர்களுடன் தொடர்பை ஏற்படுத்துவது

நீங்கள் சாத்தியமான சிறந்த சிகிச்சையையும் பராமரிப்பையும் பெறுவதை உறுதிசெய்வதற்கு, நாங்கள் *மனநலப் பராமரிப்புக் கொள்கைகளின் சாசனத்துடனான* இணக்கத்தை ஊக்குவித்து வளர்க்கிறோம்.

## நாங்கள் **யாருக்கு** உதவ முடியும்

நீங்கள் பின்வரும் நபராக இருந்தால், மனநலனை ஆதரித்துப்பேசுபவர்களால் உங்களுக்கு உதவ முடியும்:

- மருத்துவமனையில் இருக்கும் சுயவிருப்பின்றிவந்த ஒரு நோயாளி
- ஒரு சமூகச் சிகிச்சை ஆணையைப் (CTO) பெற்றுள்ள யாரேனும் ஒருவர்
- ஒரு மனநோய் மருத்துவரால் பரிசோதனை செய்யப்படுவதற்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ள யாரேனும் ஒருவர் (நீங்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தால், எங்களை அழைப்பதற்கு ஒரு தொலைபேசியைப் பாவிக்க அவர்கள் உங்களை அனுமதிக்க வேண்டியது கட்டாயமாகும்)
- நீங்கள் மதிப்பீட்டிற்காக தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளதன் காரணமாக வெளியேறுவதற்கு அனுமதிக்கப்படாத, மருத்துவமனையில் உள்ள ஒரு தன்னார்வ நோயாளி
- *குற்றவியல் சட்டத்தின் (மனநிலை பாதிக்கப்பட்டுள்ள குற்றவாளி) சட்டம் 1996* -இன் கீழ் (எ.கா. ஒரு மருத்துவமனை அல்லது காவல் ஆணை) மற்றும் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனை ஒன்றில் அல்லது சமுதாயத்தில் வசிக்கின்ற மனநிலை பாதிக்கப்பட்ட ஒரு குற்றவாளி
- தனியார் மனநோய் விடுதியில் வசிக்கும் ஒருவர்.

நீங்கள் மேற்கண்டவர்களில் ஒருவரா என்பது உங்களுக்கு உறுதியாகத் தெரியவில்லை எனில், எங்களை அழைக்கவும்:

- எங்களால் உங்களுக்கு உதவ முடியலாம்
- எங்களால் உங்களுக்கு உதவ முடியலாம்
- உங்களுக்கு உதவக்கூடிய வேறு ஒருவரிடம் உங்களைப் பரிந்துரைக்க முடியும்.

குடும்பம், பராமரிப்பாளர்கள் மற்றும் பிற தனிப்பட்ட ஆதரவாளர்கள் உங்கள் சார்பாக எங்களை அழைக்க முடியும் மற்றும் நீங்கள் சம்மதித்தால் நாங்கள் அவர்களுடன் இணைந்து செயல்படுவோம்.

## நாங்கள் **எப்போது** உங்களைச் சந்திப்போம்

கீழே காணப்படும் சூழ்நிலைகளில் ஒரு மனநல ஆதரவாளர் நீங்கள் 18 வயதிற்கு மேற்பட்டவராக இருந்தால் உங்களை 7 நாட்களுக்குள்ளும், நீங்கள் 18 வயதிற்குட்பட்டவராக இருந்தால் 24 மணிநேரத்திற்குள்ளும் உங்களுடன் தொடர்புகொள்வார்:

- நீங்கள் சுயவிருப்புடன் வராத ஒரு நோயாளியாக்கப்பட்டுள்ளீர்கள்.
- நீங்கள் ஒரு சமூகச் சிகிச்சை ஆணையின் (CTO) மீது வைக்கப்பட்டுள்ளீர்கள்
- நீங்கள் மனநிலை பாதிக்கப்பட்ட ஒரு குற்றவாளி மற்றும் ஒரு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளீர்கள்

நீங்கள் எந்த நேரத்திலும் எங்களை அழைப்பதற்கு அல்லது உங்களுக்காக மனநலச் சேவைகள் ஊழியர்களைக்கொண்டு எங்களை அழைக்க உங்களுக்கு உரிமை உண்டு. அத்துடன்:

- உங்களை ஆதரித்துப் பேசும் ஒருவர் இயலுமானளவு விரைவில் உங்களைத் தொலைபேசியில் திரும்ப அழைப்பார் அல்லது உங்களைச் சந்திப்பார்
- நீங்கள் பரிசோதனைக்காக பரிந்துக்கப்பட்டிருந்தால், மனநலனுக்காகப் பரிந்துபேசும் ஒருவர் உங்களை 3 நாட்களுக்குள் தொடர்புகொள்ள வேண்டும் என்றாலும் நாங்கள் 24 மணிநேரத்திற்குள் உங்களைத் தொடர்புகொள்ள முயற்சி செய்வோம்
- நீங்கள் 18 வயதிற்குட்பட்டவர் எனில், உங்களை ஆதரித்துப் பேசும் ஒருவர், 24 மணிநேரத்திற்குள் தொடர்புகொள்வார்.

மனநலனை ஆதரித்துப்பேசுபவர் மருத்துவமனை, மனநலச் சேவை அல்லது விடுதியைப் பார்வையிட்டுக் கொண்டிருக்கும் வேளையிலும் கூட நீங்கள் அவரை அணுகலாம்.

பெர்த், அல்பேனி, பன்பர்ரி, கல்கூர்லி மற்றும் புரூம் ஆகியவற்றைச் சேர்ந்த மனநல உரைஞர்கள் எங்களிடம் பணிபுரிகின்றனர். நீங்கள் வேறு ஏதேனும் இடத்தில் இருக்கிறீர்கள் எனில், நாங்கள் உங்களைத் தொலைபேசியில் தொடர்புகொள்வோம்.